செ. கு. எண்: 128 நாள்:15.10.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் வாழ்த்துச் செய்தி – 15.10.2019

---

வறுமையை ஒழிப்பதற்கான பொருளாதார திட்டங்களை வகுத்தமைக்காக **திரு.அபிஜித் பேனர்ஜி**க்கும் அவரது மனைவி **திருமதி எஸ்தர் டூஃப்ளோ**க்கும் 2019 ஆம் ஆண்டிற்கான **'நோபல் பரிசு'** கிடைத்ததற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் பிறந்த சர்வதேசப் பொருளாதார மேதையான திரு.அபிஜித் பேனர்ஜி அவர்கள் பொருளாதார ஆராய்ச்சியாளராகவும் பேராசிரியராகவும் திறம்பட பணியாற்றி வருபவர். திரு.அபிஜித் பேனர்ஜி மற்றும் அவருடைய மனைவி திருமதி எஸ்தர் டூஃப்ளோ ஆகிய இருவரும் இயக்குநர்களாக உள்ள J-PAL நிறுவனமும் தமிழ்நாடு அரசும் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, இதுவரை 7 துறைகளில் 15 ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. திரு.அபிஜித் பேனர்ஜி மற்றும் அவரது மனைவி திருமதி எஸ்தர் டூஃப்ளோ உட்பட உலகப் புகழ் பெற்ற பல்வேறு பொருளாதார அறிஞர்களின் கருத்துகளைப் பெற்று தமிழ்நாடு அரசு மக்கள் நலனுக்கான திட்டங்களைத் தீட்டி வருகிறது.

திரு.அபிஜித் பேனர்ஜி மற்றும் அவருடைய மனைவி திருமதி எஸ்தர் டூஃப்ளோ ஆகிய இருவருக்கும் **'பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு'** கிடைத்ததற்கு தமிழ்நாடு மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9